# வரலாற்றுப் புகழ் வைக்கத்தில் பெரியாருக்குப் பேரன் எடுத்த பெருவிழா!

## கழகப் பொதுச் செயலாளர் – நீர்வளத் துறை அமைச்சர் துரைமுருகன் !

இம்மாதம் 11 மற்றும் 12 ஆகிய தேதிகளில் கேரள மாநிலத்தில் வைக்கம் திருநகரில் தமிழக முதல்வர் தளபதி மு.க.ஸ்டாலின் அவர்கள் எடுத்த “வைக்கம் போராட்டத்தில் தந்தை பெரியார் நூற்றாண்டு நிறைவு விழா” என்ற விழாவைத் தான் குறிப்பிடுகிறேன்.

வைக்கம் என்ற ஒரு சிறு நகரத்தில் நூறு ஆண்டுகளுக்கு முன்னால் தந்தை பெரியார் சாதித்த சாதனைகளை எல்லாம் குறிப்பிடத்தான் இந்தப் பெருவிழா.

வைக்கம் இன்றைக்கு இருப்பதைப் போல் நூறாண்டுகளுக்கு முன்னால் இருந்திருக்க முடியாது.

ஆனால், இன்றைக்கு இருப்பதைப் போலவே நூறாண்டுகளுக்கு முன்னால் நகரின் நடுவே, நாலு புறம் பிரம்மாண்டமான மதில் சுவருக்கு மத்தியில் அமைந்திருப்பது மகாதேவன் என்ற பெயர் கொண்ட ஒரு கோயில். அது இன்றும் மாறாமல் அப்படியே தான் இருக்கிறது.

நான்கு புறத்திலும் அகண்ட வீதிகள்;

வீதிகள் தோறும் பிராமணர்கள் குடியிருப்பு;

பிரம்மாண்டமான ஒரு குளம்;

இத்யாதி இத்யாதிகளோடு தெருக்கள் அமைந்திருக்கிறது.

இன்று போல் அன்றைக்கு இல்லாவிட்டாலும், வைதீகத்தின் ஆட்சி பலமாக இருந்திருக்கிறது. அந்தணர்கள் இட்டதுதான் சட்டம்.

திருவாங்கூர் மன்னருக்கு அந்தப் பிராமணர்கள் எல்லாம் செல்லக் குழந்தைகள். எனவே, பிராமணர்கள் ஊர் தோறும் அதிகாரம் நடத்தியதைப் போல் வைக்கத்திலும் நடத்தி இருக்கிறார்கள். தாழ்த்தப்பட்ட அரிஜனப் பெருமக்கள் கோயிலுக்குள் நுழையக் கூடாது என்பது மட்டுமல்ல, நாலுபுறத்திலும் இருக்கிற வீதிகளிலும் கூட



அவர்கள் நடமாடக் கூடாது என்று ஒரு கண்டிப்பான உத்தரவை அந்தப் பிராமணர்கள் பிரகடனப்படுத்தி இருந்தார்கள்.

அந்தத் தெருக்களில் நாய் போகலாமாம், எருமை மாடுகள் போகலாமாம், பன்றிகள் வரலாமாம் ஆனால் மனிதர்கள் இந்த மண்ணுக்குச் சொந்தக்காரர்கள், உழைப்பின் பிம்பங்கள் அந்தத் தெருக்களில் நடமாடக்கூடாது என்பது எவ்வளவு பெரிய துரோகம் –அகம்பாவம்.

யாரும் எதிர்த்து கேள்வி கேட்க முடியாது. கேள்வி கேட்டால் பிராமணர்களுக்குக் கோபம் வருகிறதோ இல்லையோ, அந்த மன்னருக்குப் பொத்துக்கொண்டுவருமாம் கோபம்.

இருந்தாலும் சில இளைஞர்கள், படித்தவர்கள், வழக்கறிஞர்கள் போன்றோர், “ஏன் இந்த நிலைமை? சட்டத்தின் முன் அனைவரும் சமமல்லவா?” என்று கேட்டிருக்கிறார்கள். கேட்டவர்கள் மீது அடிதடி, வீடுகள் தீய்க்கு இரை, அரசாங்கம் அவர்கள் மீது பொய் வழக்குகள், இப்படி பல கொடுமைகள் அரங்கேறியது. இனி தாங்க முடியாது இத்தொல்லைகளை என்று நினைத்து, தந்தை பெரியாருக்கு தந்தி கொடுக்கிறார்கள். பெரியார் காங்கிரசில் இருந்தாலும் அவர் பகுத்தறிவுவாதி. ஆண்டவன் பெயரால், சாஸ்திர சம்பிரதாயங்கள் பெயரால் எங்கே அக்கிரமங்கள் நடந்தாலும் அதை அஞ்சாமல் தட்டிக் கேட்பது தந்தை பெரியாரின் வழக்கம்.

வைக்கம் பகுதி அந்தக் காலத்தில் சென்னை ராஜ்ஜியத்தோடு இணைந்திருந்தாலும், பல



மொழி பேசக்கூடிய பல்வேறுபட்ட மக்கள் வாழுகிற பூமி. அங்கு போகிறோமே என்ன நடக்குமோ என்பதைப் பற்றியெல்லாம் கவலைப்படாமல், தந்தியைப் பார்த்தவுடன், தன் துணைவியார் நாகம்மையாரையும் தன் தங்கை கண்ணம்மாளையும் அழைத்துக் கொண்டு வைக்கத்திற்குப் புறப்பட்டுச் சென்று விட்டார் பெரியார். பெரியார் வைக்கம் பகுதிக்குப் போன பிறகு போராட்டம் சூடு பிடிக்க ஆரம்பித்தது. மக்களுக்கு ஒரு விழிப் புணர்ச்சி ஏற்பட்டது.

பெரியார் தன் போராட்டத்தை கைவிட வேண்டும் என்று திருவாங்கூர் மகாராணி பெருமுயற்சி எடுத்தாராம். காந்தியாரையே தூது விட்டாராம். ஆனால் அவையெல்லாம் பெரியாரிடத்திலே செல்லுபடியாகவில்லை. வேறு வழியின்றி பெரியாரை கைது செய்தார்கள். கையிலும், காலிலும் விலங்கு மாட்டினார்கள். திருவனந்தபுரம் தனிமைச் சிறையிலே அடைத்தார்கள். அங்கே சிறையிலே கல் உடைக்கிற வேலையையும் தந்தை பெரியார் செய்து வந்திருக்கிறார்.

பெரியார் அப்பொழுதும் அசைந்து கொடுக்க வில்லை என்கிற நிலை ஏற்பட்ட பிறகு, வருணாசிரமத்திற்குச் சொந்தக்காரர்கள் சில பேர் பெரியாரை சத்ரு சங்கா யாகம் என்று ஒரு யாகம் செய்து பெரியாரை கொன்றுவிடலாம் என்று முயற்சித்தார்களாம். பாவம் அந்த யாகத்தின் பலன் பெரியாரை ஒன்றும் செய்யமுடியவில்லை. திருவாங்கூர் மகாராஜாவை திருநாடு அனுப்பி விட்டது. மன்னர் இறந்துவிட்டதால் கைதிகளை விடுதலை செய்தார்கள். அதில் பெரியாரும் ஒருவர். வெளியே வந்த பெரியார் மீண்டும் அந்தப் போராட்டத்தை தொடர்ந்தார் என்பது நீளமான சரித்திரம்.

நூறு ஆண்டுகளுக்கு முன்னால் அந்த மாபெரும் மனிதர் வைக்கம் நாட்டில் பகுத்தறிவு என்ற விதையை விதைத்தார். அந்த விதை இன்று அங்கு வளர்ந்து, பூத்தும், காய்த்தும் இருக்கிறது. அவைகளையெல்லாம் காட்சிப்படுத்த பெரியார் நினைவகங்கள் சிலவற்றை அங்கு எழுப்பி அதைத் திறந்து வைப்பதற்காக தளபதி வைக்கம் சென்றார் என்னையும் அழைத்துக் கொண்டு.

**கலைஞரோடு எத்தனையோ முறை எங்கெல்லாமோ உடன் சென்றிருக்கிறேன். ஆனால் தளபதியோடு நீண்ட தூரப் பயணம் நான் மேற்கொண்டது இதுதான் முதல் முறை. இந்தப் பயணத்தில் அவர் என்னிடத்திலே காட்டிய பரிவு, என் உடலின் மீது அவர் எடுத்துக் கொண்ட அக்கறை, ஒவ்வொரு செயலிலும் என்னை உடன் வைத்துக் கொள்ள வேண்டும் என்ற கனிவு இவையெல்லாம் கண்டு நான் அவர் மீது வைத்திருந்த அன்பும் மரியாதையும் உயர்ந்து நின்றது.**

சென்னையிலிருந்து விமானம் மூலம் கொச்சினுக்குச் சென்றோம். கொச்சினிலிருந்து வைக்கம் வரையில் சுமார் 11/2 மணி நேரப் பயணம். கேரளாவில் எங்கு பார்த்தாலும் சாலை ஓரங்களில் இரு புறத்திலும் தொடர்ச்சியாக வீடுகள் இருக்கும், கடைகள் இருக்கும், பள்ளிக் கூடங்கள் இருக்கும், பசுஞ்சோலைகள் இருக்கும், இடையிடையே ஆறுகள் குறுக்கிடும், அவற்றின் மீதெல்லாம் பாலங்கள் அமைந்திருக்கும்.

தளபதி அவர்கள் விமானத்தை விட்டு இறங்கி வெளியே வந்தவுடனேயே அது கொச்சின் விமான நிலையம் அல்ல, சென்னை விமான நிலையம் என்று நினைக்கத்தோன்றுகிற அளவிற்கு வரவேற்புப் பதாகைகள், வாழ்த்து முழக்கங்கள், இருவண்ணத் தோரணங்கள், எழுச்சி மிக்க படை வரிசை ஆகியவற்றைக் கண்டேன்.

**தளபதி மீது அண்டை மாநிலத்திலும் காட்டுகிற ஆர்வத்தை பார்த்து எனக்குள் மகிழ்ந்து கொண்டேன். விமான நிலைய வளாகத்தைத் தாண்டி எங்கள் பயணம் தொடர்ந்த பொழுது, சாலையின் இருபுறத்திலும் இருந்த வீடுகளிலிருந்து பெரியவர்கள், சிறியவர்கள், ஆண்கள், பெண்கள் என்று வித்தியாசமில்லாமல் சாலை ஓரத்தில் நின்று, தமிழ்நாட்டில் ஒரு ஊருக்குப் போனால் எப்படி ஆர்வத்தோடு மக்கள் அணிவகுத்து கைகாட்டி வாழ்த்துவார்களோ அப்படி அந்த மக்கள் தளபதியைப் பார்த்து கைகாட்டினார்கள். செல்பி எடுக்காத வீடுகளே இல்லை என்று சொல்லலாம். மக்களின் வரவேற்பைப் பெற்றுக் கொண்டு வந்த தளபதி அவர்களின் கார் அதுவாகவே மெதுவாகப் போக ஆரம்பித்தது. வழக்கமாக 1 1/2 மணி நேரத்தில் சென்றடைய வேண்டிய தூரத்தை 2 மணி நேரத்தில் சென்றடைய நேர்ந்தது.**

அந்த 2 மணி நேரமும் நின்றிருந்த மக்களைப் பார்த்து தளபதி அவர்கள் கையை அசைத்து வாழ்த்துக்களை தெரிவித்தார். இடையிடையே அங்கேயும் மனுக்களுக்குக் குறைச்சல் இல்லை. சிலர் வண்டியின் ஓரத்திற்கு வந்து தளபதியை அருகில் பார்த்து, உங்களை மாதிரி எங்களுக்கும் ஒரு முதல்வர் வேண்டும் என்று சொன்னதைக் கேட்ட பொழுது நான் ஆச்சரியப் பட்டுப் போனேன்.

11 ஆம் தேதி மாலை, தான் ஒரு முதலமைச்சர் என்ற நிலையிலிருந்து மாறி, தளபதி அவர்கள் எல்லோரிடத்திலும் தோழராகப் பழகி, எங்களையெல்லாம் அழைத்துக் கொண்டு Boat ல் ஒரு பயணத்தை கடல் மீது மேற்கொண்டார். அந்தப் பயணம் மிக இனிமையானது. தளபதி அவர்கள் எல்லாவிதமான கவலைகளையும் மறந்து, உற்சாகத்தோடு வீசுகின்ற காற்றை ரசித்தவாறே கடற்கரை ஓரத்திலே வீடுகட்டி வாழுகின்ற அந்த அதிசயத்தையும் பார்த்தார். ஒரு குழந்தையைப் போல் Boat ன் முன்னும் பின்னும் போய் நின்று வேடிக்கைப் பார்த்தார். அதைப் பார்த்த எல்லோரும் தளபதிக்கு ஒரு மூன்று மாதத்திற்கு ஒரு முறையாவது இப்படி ஒரு பயணம் தேவை என்று சொன்னார்கள். அதை நானும் ஆமோதித்தேன். மழைத்தூறல், அந்தி வாணம், கடலிலே சூரியன் மறைகிற காட்சி இவற்றோடு அறைக்கு வந்தோம். சிறிது நேரம் உரையாடிவிட்டு அவரவர்கள் அறைக்கு வந்தோம்.

மறுநாள் காலை மாண்புமிகு கேரள முதல்வர், தளபதி அவர்கள் தங்கியிருந்த அறைக்கு வந்தார்கள். மாலை மரியாதைகள் பரஸ்பரம் பரிமாறிக் கொள்ளப்பட்டது. தளபதி அவர்கள், நான், கேரள முதல்வர் மற்றும் கேரள மாநிலத்தின் கூட்டுறவுத்துறை அமைச்சர் நாங்கள் நால்வரும் ஒரே மேசையில் அமர்ந்து சிற்றுண்டி அருந்தினோம்.

இதனையடுத்து பெரியார் பகுத்தறிவு விதைகளை ஊன்றிய இடத்தில் நடைபெறுகிற நிகழ்ச்சிக்குச் சென்றோம். அடடா அந்தக் காட்சியை நான் எப்படி வர்ணிப்பது. தமிழ்நாட்டில்தான் கூட்டம் மேலே வந்து விழும் என்று காவல் துறையினர் கயிறு கட்டி தடுப்பார்கள். அந்த ஊர் மக்கள் அதைவிட வேகமாக கோஷம் போடுகிறார்கள். அந்த மக்களை காவல்துறையினர் கயிறு கட்டித் தடுத்த காட்சி எனக்குத் தமிழகத்தை நினைவுபடுத்தியது.

**நூற்றுக்கணக்கான கேமராக்காரர்கள் தளபதி அவர்களை படமெடுத்தார்கள். உள்ளே நுழைந்ததும் முதலில் பெரியார் சிலை இருந்தது. பெரியார் உட்கார்ந்து ஒரு விரல் காட்டுவதைப் போல் இருக்கும். அதைப் பார்த்து என் கண்கள் பனித்துவிட்டது. அடடா இந்த மனிதர் 100 வருடத்திற்கு முன்னால் தன்னந்தனியாக வந்து இந்த இடத்தில் போராட்டம் நடத்தி இருக்கிறாரே என்று ஆச்சரியத்தில் ஆழ்ந்தேன். 100 வருடத்திற்குப் பிறகு தளபதி எடுக்கிற விழாவில் நாம் கலந்து கொள்ளும் வாய்ப்பைப் பெற்றதை எண்ணி ஒரு கனம் கண்ணீர் சிந்தினேன்.**



பெரியாரை வணங்கிவிட்டு அடுத்து நாங்கள் சென்றது ஒரு நினைவிடம். முன்பு அருங்காட்சியகம் என்று ஒரு சின்ன கட்டிடமாக அது இருந்திருக்கிறது. கடந்த ஆட்சியில் அதைக் கட்டி இருக்கிறார்கள். பெரியாரோடு ஜெயலலிதா, எம்.ஜி.ஆர். ஆகியோர் இருக்கிற படங்களையெல்லாம் வைத்திருக்கிறார்கள். ஆனால் கலைஞரும் பெரியாரும் இருப்பது போன்ற படம் ஒன்று கூட முன்பு அங்கு வைக்கப்படவில்லை.

ஆனால், இப்போது அந்த இடத்தை சீர்படுத்தி அற்புதமான போட்டோக்களை சேகரித்து கண்காட்சியாக வைத்திருக்கிறார்கள். முன்னர் அவர்கள் செய்ததைப் போல் இல்லாமல், ஜெயலலிதா, எம்.ஜி.ஆர். ஆகியோர் பெரியாரோடு இருக்கும் படங்களையும் வைத்திருக்கிறார் தளபதி. அந்தக் கட்டிடத்தின் மேலே ஒரு மாடி. அங்கேயும் கண்காட்சி. அற்புதமான முகப்பு கொண்ட அந்தக் கட்டிடம் பார்ப்பதற்கு பிரம்மாண்டமாக எழுந்து நிற்கிறது. அதைத் திறந்து வைத்தார் தளபதி அவர்கள்.





அடுத்து நாங்கள் சென்ற இடம், தளபதி அவர்கள் உத்தரவின் பேரில் அமைச்சர் வேலு அவர்கள் கட்டி முடித்துள்ள நூலகம். அழகான கட்டிடம், அற்புதமான அமைப்புகள், மலையாளம், தமிழ், ஆங்கிலம் ஆகிய மொழிகளில் ஏராளமான புத்தகங்கள் வைக்கப்பட்டுள்ளன. புத்தகங்களைப் படிப்பதற்கு மெத்தை போட்டு வைத்திருக்கிறார்கள். குறிப்பெழுத முன்னால் ஒரு குறுகிய மேசை, இவ்வளவு போதாது என்று அந்தக் கட்டிடம் குளிர்சாதன வசதி செய்யப்பட்டிருக்கிறது. அப்படிப்பட்ட அழகுமிக்க நூலகத்தை திறப்பதற்காக, தளபதி, கேரள முதல்வர், நான், வேலு மற்றவர்கள் நின்று கொண்டிருந்தோம். ரிப்பனை வெட்டுவதற்கு கத்தரிக்கோலை எடுத்து கையிலே மாட்டிக் கொண்ட தளபதி, என்ன நினைத்தாரோ, திடீர் என்று அந்தக் கத்திரியை என் கையில் கொடுத்து, பொதுச் செயலாளர் நீங்கள், இந்த நூலகத்தை நீங்கள் தான் திறக்க வேண்டும் என்று அந்தக் கத்திரியை என்னிடம் கொடுத்தார். ஒரு கணம் நான் மெய் மறந்து போய்விட்டேன். நான் வகிக்கின்ற பதவியின் மீது எவ்வளவு பெரிய மரியாதையை வைத்திருக்கிறார் தளபதி அவர்கள். பொதுச் செயலாளர் என்கிற பதவியை எங்கெல்லாம் கவுரவப்படுத்த வேண்டுமோ அங்கெல்லாம் கவுரவப்படுத்துகிற நிலையைக் கண்டேன். அப்படித்தான் கலைஞர், பேராசிரியரிடம் காட்டுவார். இன்றைக்கு தளபதி என்னிடத்தில் அந்த மரியாதையைக் காட்டுகிறார். அன்று கலைஞரை கண்டேன் இன்று தளபதியைக் காண்கிறேன். என் கண்கள் துளிர்த்தபடி அந்த ரிப்பனை வெட்டினேன்.

ஒரு பெரிய மண்டபம். அகண்ட மேடை. 6,000 இருக்கைகள் போடப்பட்டதாக சொல்லப்பட்டது. அதற்கு மேலும் மக்கள் வெள்ளம். கண்ணுக்கெட்டிய தூரம் வரை மக்கள். உணர்ச்சிப் பிம்பங்களாக அமர்ந்திருந்தனர். கோவை, ஈரோடு மாவட்டங்களிலிருந்து ஏன் மதுரை மாவட்டத்திலிருந்து கூட ஏராளமானோர் வந்திருந்தார்கள். ஆனால் பெரும் பகுதியான மக்கள் கேரளத்து மக்கள் தான். தமிழை புரிந்து கொள்கிறார்கள். அந்த இடத்தில் தளபதி ஆற்றிய உரையை நான் கூர்ந்து கவனித்தேன். எதிரிகள் பேசினாலும், நண்பர்கள் பேசினாலும் அவர்கள் பேசும் போது உன்னிப்பாக கவனிக்க வேண்டும். அந்தச் சமயத்தில் வரும் வார்த்தைகள் தான் அவர்களின் மனநிலையைக் காட்டக் கூடியவை, அவர்களை அறியாமல் வந்து விழக் கூடியவை என்பது நான் கலைஞரிடத்திலே கற்றுக் கொண்டது.

அன்று தளபதி அவர்களின் பேச்சு வரலாற்றுச் சிறப்புமிக்க பேச்சு, ஒரு வரலாற்று சிறப்புமிக்க நிகழ்ச்சி அல்லவா அது. வேறு ஒரு மாநிலத்திலே நின்று பேசுகிறோம் என்ற நினைவும் அவருக்கு இருந்தது, வேறு மாநிலத்தவராயினும் அவர்கள் எல்லாம் நம்மவர்களாக வந்து இருக்கிறார்கள் என்ற களிப்பும் அவர் பேச்சில் காணப்பட்டது.

தமிழ் நாட்டில் கூடுவதைப் போல ஒரு கூட்டம், தலைவரிடத்திலே காட்டிய பாசம், தமிழ்நாட்டின் ஒரு பகுதியாகவே அன்றைக்கு அது ஆகிவிட்டது. எந்த கேரளத்துக்காரரோடு பேசினாலும் எங்களுக்கு ஸ்டாலினைப் போல் ஒரு முதல்வர் வேண்டும் என்று தான் சொன்னார்கள்.

100 ஆண்டுகளுக்கு முன்னால் வைக்கத்தில் பெரியார் பேறுபெற்றார். அவருக்கு எடுத்த பெருவிழாவின் மூலம், இன்றைக்கு அவர் பேரன் மு.க.ஸ்டாலின் பேறுபெற்றிருக்கிறார்.

இந்த இரண்டு நாளில் தளபதி அவர்கள் என்னிடம் பழகியது, பேசியது, தனிப்பட்ட முறையில் என் உடல்நிலையை நினைத்து என்னை கவனிக்கச் சொன்னது, அந்த ஊர் மக்கள் மனுக்களைக் கொடுக்க வந்த போது, வண்டியை நிறுத்தி வாங்கியது, அவர்கள் போட்டோ எடுக்க முற்பட்டபோதெல்லாம் அதற்கு சம்மதித்தது, இவையெல்லாம் அதிக பண்பட்ட தலைவர்களுக்குத் தான் வரும்.

**ஆம் தளபதி மு.க.ஸ்டாலின் அவர்கள் கொஞ்சம் கொஞ்சமாக கலைஞராக மாறி வருகிறார்.**



தென்கிழக்கு ஆசிய நாடுகளான சிங்கப்பூர், மலேசியா மற்றும் இந்தோனேசியா ஆகிய நாடுகளில் நடைபெற உள்ள துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்த நாள் நிகழ்ச்சிகளில் கலந்து கொள்ள சென்றிருக்கும் தி.மு.க. அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி 13.12.2024 அன்று சிங்கப்பூரில், சிங்கப்பூர் தி.மு.க. அயலக அணியின் சார்பில், ஏற்பாடு செய்யப்பட்ட விழாவில் சிங்கப்பூர் தமிழர் இயக்கத்தில் அமைந்துள்ள பேரறிஞர் அண்ணா சிலைக்கு சிங்கப்பூர் அயலக அணி திமுக சார்பில் மாலை அணிவித்தார். இந்நிகழ்ச்சியில் சூர்யா வெற்றிகொண்டான், சையத்ஹபீஸ், நாகை ஏ.கே.எஸ்.முருகன் மற்றும் நரசிம்மன், ஆலோசகர் ஆரிப், ராஜா முகமது, சிவா செந்தில் ஆகியோர் கலந்துகொண்டனர்.



நாகை மாவட்டம் நாகூர் அவுரி காரன் தோட்டம் பகுதியில் மழை நீரால் சூழப்பட்ட பகுதியை பள்ளி கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி பார்வையிட்டார். நாகை மாவட்டக் கழகச் செயலாளரும், தமிழ்நாடு மீன் வளர்ச்சி கழக தலைவருமான என்.கௌதமன் மாவட்ட ஆட்சித்தலைவர் ப.ஆகாஷ், நாகை சட்டமன்ற உறுப்பினர். .ஜெ.முகம்மதுஷா நவாஸ், நாகை நகர கழக செயலாளர் நகர மன்ற தலைவர் இரா..மாரிமுத்து, நாகூர் நகரக் கழக செயலாளர் நகர மன்ற துணைத் தலைவர் எம்.ஆர்.செந்தில் ஆகியோர் உள்ளனர்.